தலைப்பு 205 - பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 205 – பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் போது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2025 ஏப்ரல் 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2025 ஜூன் 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான போது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமை, நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க பொருண்மையானவை தொடர்ப்பிலும் நியாமான நிலைமையை பிரதிபளிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கை 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த வியடங்களில் இருந்துதான தாக்கத்தை தவிரத்து எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்கை தயாரிக்கும் அடிப்படை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய 01 ஆம் பக்கம் தொடர்பில் கவணம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்ப பிரமாணம் 150, 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் போது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தின் பொது திறைசேரியினதும், பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால் இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை போது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தினதும், பொது திறைசேரியினதும், பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மட்டும் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்ட இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும், உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் போது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் போது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக

காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவு ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடகத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள், சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமானதாகவும் உள்ளடக்கப்பட்டதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலை மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அமைச்சினால் 2022 ஆண்டில் திணைக்களத்திற்கு உரிமையை உரித்தாக்கியிருநத இரண்டு வாகனங்களை கிரயத்தில் அல்லது பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதிக்கு நிதியல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.	இந்த இரண்டு வாகனங்களின் அப்புறப்படுத்தும் அலுவலகள் விரைவாக மேற்கொள்ளப்படுவதனால் நிதியல்லாத சொத்துக்களில் உட்படுத்தப்படாததுடன், பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியை பெற்றுக்கொண்டு அடுத்த ஆண்டில் கணக்குகளில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் அறிவிக்கப்படுகின்றது.	2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்கு வழிகாட்டல் 06/2024 இன் பந்தி 8.2 இன் பிரகாரம் தொடர்ந்தும் அறிக்கையிடப்பட வேண்டிய நிதியல்லாத சொத்துக்கள் காணப்படின் அவற்றை இனங்கண்டு கிரயத்திற்கு அல்லது கிரயத்தை இனங்காண முடியாத சந்தர்ப்பங்களில் மதிப்பீட்டுப் பெறுமதிக்கு கணக்கீடு செய்ய வேண்டும்.

(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணியிருக்காமை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிதிப் பிரமாணம் 891(1) பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் அடங்கிய பிணைப் பதிவேடொன்று தயாரித்திருக்கவில்லை.	தற்போது பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு, வைப்புச் செய்ய வேண்டிய தொகையினை தீர்மானித்து உரிய உத்தியோகத்தர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அரசாங்க சேவை பரஸ்பர பிணையாளர் சங்கத்துடன் கூட்டிணைந்து தொடர் நவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், பிணை வைப்புப் பதிவேடொன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது.	நிதிப் பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அடங்கியவாறு பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர் தொடர்பாக பிணைப் பதிவேடொன்று பேணிச் செல்ல வேண்டும்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்டிருந்த பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

முன்னைய ஆண்டிற்காக அறிக்கையின் பந்தியுடன் தொடர்பு	செயற்படுத்தப்பட்டிருக்காத பரிந்துரை	இந்த அறிக்கையின் பந்தியுடன் தொடர்பு
1.6.1(ஆ)	நிதிப் பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உள்ளடக்கியவாறு பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிணைப் பதிவேடொன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	1.6.1(ஆ)

3. நிதி மீளாய்வு

3.1 செலவு முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ஒரு மீண்டுவரும் செலவு விடயம் மற்றும் மூன்று மூலதன செலவு விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 6,000,000 இற்கான ஏற்பாடுகளில் ரூபா 3,368,246 தொகை சேமிக்கப்பட்டிருந்ததுடன், அந்த சேமிப்பு தேறிய ஏற்பாடுகளில் 20 சதவீதத்திற்கும் 98 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சைக் கொண்டுள்ளது.	அத்தியவசியமல்லாத அலுவலக தேவைப்பாடுகள் கொள்வனவு செய்வதை வரையறுத்தல், அலுவலகக் கட்டிடத்தில் மேற்கொள்ளப்பட்ட முழு புனர் நிர்மாண அலுவல்கள் காரணமாக தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்வதை வரையறுத்தல், கணினிகள் மற்றும் துணைக் கருவிகள் கொள்வனவு செய்வதற்காக திட்டமிடப்பட்ட போதிலும், உரிய அங்கீகாரங்கள் பெற்றுக்கொண்டு திட்டமிட்டவாறு பெறுகை அலுவல்கள் பூர்த்தி செய்ய முடியாமல் போதல், அலுவலக கட்டிடத்தின் மொத்த புனரமைப்பு விடயங்கள் அதன் உரிமையாளரினால் மேற்கொள்ளப்படல், இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் அபிவிருத்தி செய்யும் உபகரணங்கள் எதிர்பார்த்த மட்டத்தில் ஏற்படாமை ஆகிய காரணங்கள் அறிவிக்கப்பட்டிருந்தது.	சரியாக செலவு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும்.
(ஆ)	ஒரு மீண்டுவரும் செலவு விடயத்திற்காக நி.பி. 66 இன் கீழ் ரூபா 450,000 தொகை மாற்றிக்கொண்டிருந்த போதிலும், தேறிய ஏற்பாடுகளில் 26 சதவீதத்தைக் கொண்ட ரூபா 156,960 தொகை சேமிக்கப்பட்டிருந்ததுடன், ஒரு மூலதனச் செலவு விடயத்திற்காக நி.பி. 66 இன் கீழ் மாற்றப்பட்டிருந்த ரூபா 1,368,000 தொகையில் ரூபா 1,265,834 தொகை சேமிக்கப்பட்டிருந்ததுடன், அது தேறிய ஏற்பாடுகளில் 53 சதவீதமாக காணப்பட்டது. அதன்படி, முறையான ஆய்வொன்றுடன் நி.பி. மாற்றங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	அலுவலக கட்டிடம் இலங்கை தரைப்படையின் உழைப்புப் பங்களிப்புடன் புனரமைக்கப்பட்டதனால் அனேகமான வார இறுதி மற்றும் அரசாங்க விடுமுறை நாட்களில் அலுவல உதவியாளர்கள் மற்றும் சாரதிகளை சேவையில் ஈடுபடுத்த நேரிடுதல் நி.பி. 66 இன் கீழ் ரூபா 450,000 தொகையொன்று மாற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், எதிர்பார்க்கப்பட்டவாறு, மேலதிக நேர கடமைகள் ஏற்படாமையால் ரூபா 156,960 இற்கான தொகையொன்று சேமிக்கப்பட்டது. நி.பி. 66 இன் கீழ் ரூபா 1,368,000 தொகை மாற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், அதற்காக உரிய அங்கீகாரங்கள் பெற்றுக்கொண்டு திட்டமிட்டவாறு பெறுகை	முறையான ஆய்வொன்றுடன் நி.பி. மாற்றங்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

		அலுவல்கள் பூர்த்தி செய்வதற்கு முடியாமல் போனமையால் ரூபா 1,265,834 இற்கான தொகையொன்று சேமிக்கப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது.	
(இ)	நம்பிக்கை சொத்து மரணச் சொத்தொன்றுக்குரிய வீடொன்றில் பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்கத்தின் அலுவலகம் நடாத்தப்பட்டு வருவதுடன், அதன் திருத்த வேலை அலுவல்கள் டீ.பீ. ஜனதியல நம்பிக்கை பொறுப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்ட போதிலும், 205-1-1-1-0-2001 இற்கான ரூபா 1,000,000 தொகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், ரூபா 198,212 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.	இலங்கை இராணுவத்தின் உழைப்புப் பங்களிப்புடன் அலுவலகக் கட்டிடத்தின் முழுமையான புனரமைப்பு 2024 ஆண்டின் போது கட்டிடத்தின் உரிமையாளரான சேர் டீ.பீ. ஜயதிலக மரணச் சொத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டமையால், இந்த ஏற்பாட்டுத் தொகை சேமிக்கப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது.	தேவைப்பாட்டைக் கவனம் செலுத்து ஏற்படுகள் ஒதுக்கப்பட வேண்டும்.

3.2 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரவு 38 இன் ஏற்பாடுகளின் படி கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

	கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்கான வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றதென பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டிதுடன், அந்த முறைமையை வெற்றிகரத் தன்மை தொடர்பாக காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன்படி முறைமையை வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுவதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அந்த மீளாய்வு எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை	தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க இந்த உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிப்பதற்காக எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 38 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும்.

	அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வாண்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.		
(ஆ)	வருடாந்தம் மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேரங்களில் தயாரிக்கப்படுகின்றதென பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், மேலும், கணக்காய்வு செய்யும் நிறுவனம் தொடர்பாக வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்க சமர்பிப்பதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும், அறிக்கையின் 4.2 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களின் காரணமாக அந்தத் தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	2024 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் உரிய தினத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட்டிருந்ததுடன், செயலாற்றுகை அறிக்கை குறிப்பிட்ட தினத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பதற்காக இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதென அறிவிக்கப்பட்டிருந்தது.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 38 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும்.

3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்படுகின்றது.

	அவதானிப்புக்கள்			கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	**பெறுமதி ரூபா**	**இணங்காமைகள்**		
(அ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் XXIV இன் உப பிரிவுகள் 4.2.5, 4.5, 4.6 மற்றும் 6.3	306,500	ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த இரண்டு வருடங்கள் கடந்திருந்த மற்றும் ஒரு வருடம் கடந்திருந்த கடன் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை	ஓய்வுதியத் திணைக்களத்திலிருந்து ஏற்பாடுகளை பெற்றுக்கொண்டு இந்த கடன் மீதியை விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஆ) 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 3.1	எடுத்திருக்கவில்லை. அனைத்து எரிபொருள் பரிசோதனையொன்றின் பின்னர் அல்லது 12 மாத கால வரையறையின் பின்னர் அல்லது 25,000 கிலோ மீற்றர் தூரம் ஓட்டத்தின் பின்னர் அல்லது எஞ்சின் தொடர்பான பிரதான திருத்த வேலையொன்றின் பின்னர் ஆகிய விடயங்கள் இடையே முதலாவதாக வரக்கூடிய சந்தர்ப்பத்தின் பின்னர மீண்டும் எரிபொருள் பரிசோதனையொன்று மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்திற்கு சொந்தமான 09 வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.	வாகனங்களில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்வதற்காக குழுவொன்று நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், இந்த ஆண்டின் குறிப்பிட்ட சுற்றறிக்கையின் படி மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 திட்டமிடல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 03 இன் பிரகாரம் உரிய படிவத்தின் படி செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் தொழில்பாடுகள் மாதாந்தம் சமர்ப்பிக்கப்பட்டு அதன்படி பொறுப்பான உத்தியோகத்தர்களின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்காததுடன், சுற்றறிக்கையின் படி செயலாற்றுகை சுட்டிகளை இனங்கண்டு செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தியிருக்கவில்லை.	2025 வாக்குப் பணக் கணக்கின் படி முதல் 04 மாதங்களுக்கான செயல் நடவடிக்கைத் திட்டம் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டதுடன், 2025 பாதீட்டு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்ட பின்னர் பொறுப்பான உத்தியோகத்தர்களின் மற்றும் செயலாற்றுகை சுட்டிகளுக்கு உட்படுத்தி மீண்டும் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.2 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2024 இன் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவச் சட்டத்தின் உப பிரிவு 47(4) இற்கு இணங்க வருடாந்த செயலாற்றுகை அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 180 நாட்களில் அல்லது அதற்கு முன்னர் வெளியிடப்பட வேண்டும். 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 02/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 10.2 இற்கு இணங்க அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல் கோவை இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கு இணங்க வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 16(2) பிரகாரம் இந்த செயலாற்றுகை அறிக்கை வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறாயினும், இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2023 ஆண்டிற்குரிய வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2024 நவம்பர் 06 திகதி 04 மாத தாமத்தின் பின்னர் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையின் தமிழ் மொழிப் பெயர்ப்பு கிடைத்தலில் தாமதம் ஏற்பட்டதால் மற்றும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் மாற்றப்பட்டதனால் தாமதமொன்று ஏற்பட்டதுடன், இவ்வாண்டில் உரிய நேரத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது.	நிதியாண்டு முடிவடைந்து 180 நாட்களுக்குள் செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(ஆ)	வருடாந்த செயலாற்றுகை அறிக்கை மீளாய்வாண்டு நிதிக்கூற்றுக்களுடன் 2025 பெப்ரவரி 28 திகதி சமர்ப்பிக்கப்படாத போதிலும், 2025 ஏப்ரல் 08 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அந்த வரைவு செயலாற்றுகை அறிக்கை 2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 10.2 இன் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்த வழிகாட்டல் இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வரைவு செயலாற்றுகை அறிக்கை, அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்த வழிகாட்டல் இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகினறது என அறிவிக்கின்றேன்.	சுற்றறிக்கையில் காணப்படும் படிவத்தின் பிரகாரம் வரைவு வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும்.

4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2022 ஜனவரி 25 திகதிய 04/2022 இலக்கம் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பந்தி 2(இ) இன் படி வாகனங்கள் உரிய முறையில் பயன்படுத்துதல் மற்றும் தேவையானவாறு அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்திற்கு சொந்தமான ஓட்ட நிலையில் காணப்படாத இரண்டு வாகனங்கள் தொடர்பாக அதன்படி நடவடிக்கை எடுக்காமல் குறிப்பிட்ட இரண்டு வாகனங்களின் திருத்த வேலைக்காக 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 426,660 இற்கான செலவொன்று மேற்கொண்டு திணைக்கள வளவில் விளைவற்று காணப்பட்டது.	தற்போது இந்த 02 வாகனங்களும் அப்புறப்படுத்துவதற்கு தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென அறிவிக்கப்பட்டிருந்தது.	சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

4.4 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
திணைக்களத்திற்கு சொந்தமான வாகனமொன்றுக்கு 2007 ஜனவரி 27 திகதி ஏற்பட்டிருந்த விபத்து தொடர்பாக ரூபா 254,038 இற்கான நட்டமொன்று உரிய சாரதியிடம் அறவீடு செய்வதற்காக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையால் கால விதிப்பின் மீது வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருந்துடன், விபத்து ஏற்பட்டு 17 வருடங்கள் கடந்திருந்த போதிலும், குறிப்பிட்ட நட்டத்தை பொறுப்பான தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	65 – 0763 இலக்கம் கொண்ட வாகனம் தொடர்பாக சம்பவம் 2007 ஏற்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக தொடர் நடவடிக்கைக்காக விசாரணைக் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு அறிக்கையொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது. அதன்படி, இது தொடர்பான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென அறிவிக்கப்பட்டிருந்தது.	நட்டத்தை குறிப்பிட்ட தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.5 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தின் கீழ் பண்டைய பெறுமதியுடைய கழுத்துறை பலாத்தொடவில் அமைந்துள்ள ரிச்மன் காஸல் கட்டிடம் குறிப்பிட்ட காலத்தினுள் முறைப் பிரகாரம் பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாமையால், கூரையில் இருந்து நீர் ஒழுகி சுவர்களுக்கு சேதம் ஏற்பட்டிருந்தமையால் திருத்த வேலை மேற்கொள்வதற்காக 2023 ஆகஸ்ட் மாதத்தில் தேசிய கட்டிட ஆய்வு அமைப்பிலிருந்து தர அறிக்கையொன்று பெற்றுக்கொண்டிருந்த போதிலும், 2024 திசெம்பர் 31 திகதி அளவிலும் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	கழுத்துறை ரிச்மன் காஸல் மாளிகை அரச தனியார் கூட்டு முயற்சியின் கீழ் திருத்த வேலை மேற்கொண்டு பாதுகாப்பதற்காக 2024 திசெம்பர் 20 திகதி அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2025 ஜனவரி 06 திகதி அங்கீகாரம் கிடைத்திருந்ததெனவும், கலந்துரையாடல் இணக்கக் குழுவொன்று மற்றும் செயற்திட்டக் குழுவொன்று நியமனம் செய்வதற்காக தொல்பொருளியல் திணைக்களத்தினால், கட்டிடத் திணைக்களத்தினால், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து உத்தியோகத்தர்களை நியமனம் செய்யும் படி 2025 ஏப்ரல் 03 திகதிய கடிதத்தின் படி கோறிக்கையொன்று சமர்ப்பிக்கபட்டிருந்ததென அறிவிக்கப்பட்டிருந்தது.	திருத்த வேலைகள் உரிய முறையில் குறிப்பிட்ட காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	வரையறுக்கப்பட்ட அஸோஸியேடட் செய்தித்தாள் கம்பனியின் அலுவல்களை செயற்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல் திணைக்களத்தின் பணியொன்றாக காணப்பட்ட போதிலும், அந்தக் கருமம் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படாததுடன், செயலாற்றுகை சுட்டியொன்றாக இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	தற்போது கம்பனியின் 87.5% பங்குகள் ''இலங்கை அரசாங்க சார்பாக'' பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு சொந்தமாக காணப்படுவதுடன், பொது நம்பிகைப் பொறுப்பாளர் கம்பனியின் 05 பணிப்பாளர்கள நியமனம் செய்யப்பட்டுள்ளனர். பொது நம்பிக்கை பொறுப்பாளர் லேக் ஹவுஸ் பணிப்பாளர் சபையை அழைத்து அதன் முன்னேற்றம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. அதேபோல், லேக் ஹவுஸ் நிறுவனத்தின் கணக்காளர் மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களுக்கும் பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்திலிருந்து பிரதிநிதியொறுவர் பங்குபற்றல் நடைபெறுகின்றது.	வரையறுக்கப்பட்ட அஸோஸியேடட் செய்தித்தாள் கம்பனியின் பங்குகளின் நம்பிக்கை பொறுப்பு அரசாங்கம் சார்பாக மேற்கொண்டு அந்தக் கம்பனியின் அலுவல்களை செயற்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகளாக காணப்படுவதனால் அதனை செயலாற்றுகை சுட்டி ஒன்றறென இனங்காண வேண்டும்.

சட்டத்தின் பிரகாரம் தலைவர் உட்பட பணிப்பாளர் சபையினால் கம்பனியின் முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் மேற்கொள்ளப்படுவதனால், நிறுவனத்தின் செயற்பாடுகள் மற்றும் செயலாற்றுகை பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் செயலாற்றுகை சுட்டியொன்றென கணிக்க முடியாது என அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ) 1922 இன் 01 ஆம் இலக்க பொது நம்பிக்கை பொறுப்பாளர் கட்டளைச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டிருந்த பொது நம்பிக்கைத் திணைக்களத்தின் பிரதான குறிக்கோளாவது நம்பிகை பொறுப்பு மற்றும் மரண சொத்துக்களை முகாமைப்படுத்துவதுடன், 2024 செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திணைக்களத்தினால் 1,141 நம்பிக்கைப் பொறுப்புக்கள் மற்றும் 176 மரண சொத்துக்களின் நிருவாக அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றது. பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு சாட்டப்படுகின்ற நம்பிக்கைப் பொறுப்புக்கள் மற்றும் மரண சொத்துக்கள் பிரதி பொது நம்பிக்கை பொறுப்பாளர் இருவரின் கீழ் நிருவகிக்கப்படுவதுடன், அமைப்பு வரைபடத்தின் படி ஒரு பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் கீழ் வெளிநாட்டு நட்டஈட்டுப் பிரிவு, சட்டங்கள் விசாரணைப் பிரிவு மற்றும் தோட்டப் பிரிவு காணப்படுவதுடன், மற்ற பிரதி பொது நம்பிக்கையாளர் கீழ் மருத்துவ உதவி / மாணவர் உதவிப் பிரிவு மற்றும் விகாரைகள் நட்டஈட்டுப் பிரிவு, தனிப்பட்ட நம்பிக்கைப் பொறுப்புப் பிரிவு மற்றும் சமயப் பிரிவு காணப்பட்டது.

பிரிவுத் தலைவர்களுக்கு பொது நம்பிக்கைப் பொறுப்பாளரினால் எழுத்துமூலம் கடமைகள் சாட்டப்பட்ட போதிலும், அந்தப் பிரிவுத் தலைவர்களினால் ஒவ்வொரு பிரிவிற்கும் உரிய கோப்புக்களை, கீழ் உத்தியோகத்தர்களுக்கு எழுத்துமூலம்

சாட்டப்பட்டிருக்கவில்லை. ஒவ்வொரு பிரிவின் மூலமும் நிறுவகிக்கப்படுகின்ற நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் மரணச் சொத்துக் கோப்புக்கள் எழுத்துமூலம் சாட்டப்பட்டிருக்காமையால் நம்பிக்கை பொறுப்பு மற்றும் மரணச் சொத்துக்களின் குறிக்கோள்கள் நிறைவேற்றப்படுதல் தொடர்பாக முறையான உள்ளகக் கட்டுப்பாடொன்று மற்றும் பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையால் லயனல் மற்றும் கிரேஸ்த அல்விஸ், சட்டவரைஞர் க.தெ.ஹே. பியசேன கல்வி நம்பிக்கைப் பொறுப்பு, லாகுகல வரலாற்று மகுல் மஹா விகாரையின் அபிவிருத்தி நிதிய நம்பிக்கைப் பொறுப்பு, ரனவெல்ல லியனஹேவகே சந்திரசேகர நம்பிக்கைப் பொறுப்பு, Wjethunga family trust நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் டீ.எஸ்.டப்ளியூ சமரகோன் புண்ணிய நம்பிக்கைப் பொறுப்பு ஆகிய நம்பிக்கைப் பொறுப்புக்களில் வருடாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய நம்பிக்கைப் பொறுப்புக்களின் குறிக்கோள்கள் வருடாந்தம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என பினவரும் விடயங்களின் படி அவதானிக்கப்பட்டது.

(i)	தெஹிவல கரகம்பிடிய ஸ்ரீ சுபோதாராம ரஜமகா விகாரையில் வசிக்கும் பிக்குகளுக்கு மற்றும் எதிர் காலத்தில் வசிக்கக்கூடிய பிக்குகளினதும் சுகாதார தேவைகளுக்காக மருத்துவ உதவி வழங்கும் குறிக்கோளுடன் 2020 ஆகஸ்ட் 24 திகதி உருவாக்கப்பட்ட படுவன்தந்திரிகே பிரியங்கா தயாலூ த அல்விஸ் மற்றும் பாதுகாப்பாளரான பொது நம்பிக்கை பொறுப்பாளரினால் லயனல் மற்றும் கிரேஸ் த அல்விஸ் நம்பிக்கை பொறுப்பு நிறுவப்பட்டு 2020 ஆகஸ்ட் 26 திகதி நம்பிக்கைப் பொறுப்பின் அடிப்படை மூலதனத்திற்காக ரூபா 262,500 தொகை பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்திற்கு ஸ்தாபகரினால் செலவு	லயனல் மற்றும் கிரேஸ் த அல்விஸ் நம்பிக்கை பொறுப்பு தொடர்பாக ஆரம்ப மூலதனம் முதலீடு செய்யப்பட்டது சட்டம் மற்றும் விசாரணைப் பிரிவினால் ஆகும். 2021 மற்றும் 2022 காலப் பகுதியில் R – 04 என்ற கோப்புத் தொகுதிக்காக விடய உத்தியோகத்தர் ஒருவர் காணப்படாமையால் அந்த கோப்புக்கள் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த விடயக் கோப்பு 2023 ஆண்டில் R – 03 விடய உத்தியோகத்தருக்கு சாட்டப்பட்ட பின்னர் இந்த உத்தியோகத்தரினால் ஒரே தடவையில் மூன்று வருடங்களின் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருந்தது.	உரிய முறையில் கடமை சாட்டுதல்கள் மேற்கொண்டு வருடாந்தம் நம்பிக்கைப் பொறுப்புக் குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட வேண்டும்.

வைக்கப்பட்டிருந்தது. எனினும், 2020 ஒக்தோபர் மாதம் முதல் 2024 ஏப்ரல் மாதம் வரை ஒவ்வொரு ஆண்டுகளிலும் கிடைத்திருந்த மொத்த வட்டி 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது ஒவ்வொரு ஆண்டுகளிலும், மேற்கூறிய குறிக்கோள்களுக்கு பயன்படுத்தாமல் 2024 ஆண்டின் போது ஒரே தடவையில் மூன்று வருடங்களின் வட்டித் தொகையாகிக ரூபா 64,850 தொகை தெஹிவலை கரகம்பிடிய ஸ்ரீ சுபோதாராம ரஜமகா விகாரைக்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன், அந்தப் பணம் நம்பிக்கைக் பொறுப்பின் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக பயன்படுத்தப்பட்டனவா என பின்தொடர் நடவடிக்கை எடுத்திருக்காத காரணத்தினால் நம்பிக்கைப் பொறுப்பின் குறிக்கோள் நிறைவேற்றப்படுமா என தொடர்பாக கணக்காய்விற்கு சிக்கல் தன்மையொன்று காணப்படுகின்றது.

(ii) உயர் நீதிமன்றத்தின் சட்ட வரைஞர் க.தெ.ஹே. பியசேன கல்விசார் நம்பிக்கைப் பொறுப்பு 2021 மார்ச் 10 திகதி ரூபா 250,000 தொகை நிதிப் பங்களிப்புடன் நிறுவப்பட்டிருந்ததுடன், அதன் அடிப்படைக் குறிக்கோளாவது ஹ/ தெபரவெவ மத்திய மகாவித்தியாளம் (தேசிய பாடசாலை) இல் கல்வி கற்கும் அனைத்து பாடப் பிரிவுகளிலும் கல்வி கற்கும் பல்கலைக்கழக நுழைவுக்கு தகைமை பெறும் மாணவர்களிடையே ஒருவரை தெரிவு செய்து புலமை பரிசில் வழங்கல் ஆனால் முதலாவது புலமைப் பரிசில் என 2023 ஆண்டில் தெபரவெவ பாடசாலை மாணவர் ஒருவருக்கு ரூபா 6,700 தொகையொன்று காசோலை மூலம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அது அந்த மாணவருக்கு கிடைக்கப்படவில்லை என

அதன்படி, 2022 ஆண்டு அட்டுறுவாக்கிய வட்டித் தொகையை பயன்படுத்தி பாடசாலையினால் அறிவித்திருந்த விதாரன கமகே ஸ்ரீ சத்சர அவர்களுக்கு 2023 திசெம்பர் 27 திகதி நிலையியற் கட்டளை இலக்கம் 64 இன் மூலம் குறிப்பிட்ட பணம் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டது. பின்னர் 2024 ஆண்டில் குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக 2024 ஜூலை 10 திகதி செலுத்தக்கூடிய தொகை (ரூபா 34,600) கணிக்கப்பட்டு அது தொடர்பாக ஸ்தாபகருக்கு பிரதியொன்றுடன் பாடசாலை மாணவர் ஒருவரின் பெயர் குறிப்பிட்டு அனுப்பும் படி அறிவிக்கப்பட்டது. எனினும், மாணவன் ஒருவரின் பெயர் அறிவிக்கப்படாமையால், 2024 ஆண்டில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை.

வருடாந்தம் பின்தொடர் நடவடிக்கை மேற்கொண்டு நம்பிக்கை பொறுப்பின் குறிக்கோளின் படி வருடாந்தம் புலமை பரிசில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	2025 ஏப்ரல் 25 திகதி க.தெ.ஹே. பியசேன அவர்களால் பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. 2022 ஆண்டின் பின்னர் 2025 ஆகஸ்ட் 31 திகதி வரை இந்த நம்பிக்கை பொறுப்பின் மூலம் எதுவித புலமைப் பரிசில்களும் வழங்கப்பட்டிருக்கவில்லை.		
(iii)	கிராகம்மன கெதர ரன்ஜித் ஆகிய ஸ்தாபகரினால் 2020 செப்தம்பர் 24 திகதி அம்பாறை ராகுகல வரலாற்று சிறப்பு மிக்க மகுல் மகா விகாரையை அபிவிருத்தி நிதிய நம்பிக்கை பொறுப்பு நிறுவப்பட்டதுடன், ஆரம்ப மூலதனம் என ரூபா 50,000 தொகை ஸ்தாபகரினால் இடப்பட்டிருந்தது. நம்பிக்கைப் பொறுப்பின் குறிக்கோளாகிய வரலாற்று சிறப்பு மிக்க மகுல் மகா விகாரைக்கு சொந்தமான விகாரை வளவினை அபிவிருத்தி செய்தல் மற்றும் திருத்த வேலை மேற்கொள்ளல் விகாரையில் ஒளிப் பூஜைக்காக பங்களிப்பு செய்தல் மற்றும் விகாரையில் வசிக்கும் பிக்குகளுக்கு நான்கு தேவைப் பொருட்கள் மூலம் உபசரித்தல் வழங்கல், வருடாந்த நிதிப் பங்களிப்பு செய்தல் ஆகிய குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக 2022, 2023 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகள் தொடர்பாக விடுவிக்கப்பட வேண்டிய முதலீட்டு வட்டித் தொகை வருடாந்தம் குறிக்கோளை நிறைவேற்றாமல் ஒரே தடவையில் 2025 ஜூலை 21 திகதி ரூபா 7,850 தொகை சங்கைக்குரிய இதிகஸ் எல்லே புண்ணியசார பிக்கு அவர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது.	2022 ஆண்டின் போது R – 04 எனும் கோப்புத் தொகுதிக்காக விடய உத்தியோகத்தர்கள் காணப்படாமையால் அந்தக் கோப்பு வேறு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த விடயக் கோப்பு 2023 ஆண்டின் R – 03 விடய உத்தியோகத்தருக்கு சாட்டப்பட்ட பின்னர் அந்த உத்தியோகத்தரினால் ஒரே தடவையில் இரண்டு வருடங்களுக்கான குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருந்தது. சரியான பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டமையால் 2024 ஆண்டின் குறிக்கோள்கள் நிறைவேற்றுதல் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.	உரிய முறையில் கடமைகள் சாட்டுதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருடாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய நம்பிக்கை பொறுப்புக் குறிக்கோள்கள் வருடாந்தம் நிறைவேற்றப்பட வேண்டும்.
(iv)	ரன்மலீ சேபாலிகா ரனவெல்ல ஆகிய ஸ்தாபகரினால் ஹெல்ப்ஏஜ் ஸ்ரீலங்கா நிறுவனத்தில் அலுவல்களுக்காக மற்றும் நன்னடத்தை மற்றும் குழந்தை பராமரிப்புத் திணைக்களத்தின்	இந்தக் கோப்பு 2024 அரையிறுதி வரை சட்டங்கள் மற்றும் விசாரணை பிரிவில் காணப்பட்டதுடன், 2025 ஆண்டில் ஆரம்ப காலாண்டில் சமய பிரிவிற்கு கிடைத்திருந்தது. குறிக்கோளை	நம்பிக்கைப் பொறுப்பு உறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும்.

	கீழ் வறிய பிள்ளைகளுக்கு உதவி உபகாரம் வழங்குதல் மற்றும் ஸ்ரீ வஜிரஞான தர்மபீடத்துக்கு பௌத்த தர்ம பிரச்சார அலுவல்களுக்காக புத்தகங்கள் வெளியிடல், ஆங்கிலம், பிரென்ச் மற்றும் ஜெர்மனி ஆகிய மொழிகளில் அச்சிட்டு வெளியிடும் குறிக்கோளுக்காக 2021 ஒக்தோபர் 29 திகதி ரனவெல்ல லியனஹேவகே சந்திரசேகர நம்பிக்கை பொறுப்பு நிறுவப்பட்டிருந்ததுடன், ஆரம்ப மூலதனம் என இதற்கு முன்னர் நிறுவப்பட்டிருந்த ரனவெல்ல லியனஹேவகே சந்திரசேகர மரணச் சொத்தில் கிடைத்த வருமானத்தை பயன்படுத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், 2024 ஜூலை 15 திகதி ரூபா 344,878 இற்கான தொகையொன்றிற்கான சாட்டுதல் பத்திரத்தின் மூலம் ரனவெல்ல லியனஹேவகே சந்திரசேகர நம்பிக்கை பொறுப்பிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. 2021 முதல் 2025 வரை 04 வருடங்கள் கழிந்திருந்த போதிலும், இதுவரை அந்த நம்பிக்கை பொறுப்பின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நிறைவேற்றும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	
(v)	2023 பெப்ரவரி 22 திகதி திணைக்களத்திற்கு கிடைத்திருந்த Wijethunga Family Trust எனும் நம்பிக்கை பொறுப்பிற்குரிய நம்பிக்கை பொறுப்பு உறுதி மற்றும் உரிய ஆவணங்கள் வெளிநாடொன்றில் தயாரிக்கப்பட்டிருந்தமையால் சட்டவரைஞர் ஒருவருடன் கலந்துரையாடி தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என 2023 ஆகஸ்ட் 17 திகதி கோப்பின் குறிப்புப் பத்திரத்தில் காட்டப்பட்டிருந்த போதிலும், இதுவரை சட்டவரைஞர்களுடன் கலந்துரையாடி தொடர் நடவடிக்கை மேற்கொண்டு நம்பிக்கை பொறுப்பின்	Wijethunga Family Trust எனும் நம்பிக்கை பொறுப்பு ஆரம்பிப்பதற்காக அதற்காக எழுதப்பட்டிருந்த மரண சாசனத்தை உறுதிப்படுத்துவதற்காக மரண சாசனப்பத்திர வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டு மரண சாசன அதிகாரப் பத்திரம் கிடைத்த பின்னர் பொது நம்பிக்கை பொறுப்பாளரின் பெயரில் பெற்றுக்கொள்ள வேண்டும். மரண சாசனப் பத்திரம் கிடைத்த பின்னர் நம்பிக்கை பொறுப்பின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு இயலுமாக இருந்தது. இந்தக் கோப்பு 2024 ஆண்டின் அறையிறுதி வரை சட்டங்கள் மற்றும் விசாரணைப்	தேவையான ஆவணங்கள் தாமதமின்றி தயாரித்து நம்பிக்கை பொறுப்பின் குறிக்கோளை நிறைவேற்ற வேண்டும்.

	குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பிரிவில் காணப்பட்டதுடன், 2025 ஆண்டில் ஆரம்ப காலாண்டில் சமய பிரிவிற்கு கிடைத்திருந்தது. குறிக்கோள்களை நிறைவேற்றும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	
(vi)	திவியாகஹ யஸஸ்ஸி பிக்குவினால் பௌத்த நிறுவனங்களை அபிவிருத்தி செய்யும் நம்பிக்கை பொறுப்பு 2007 நவம்பர் 07 திகதி ரூபா 5,000 இற்கான மூலதமொன்றுடன், பௌத்தி நிறுவனத்தின் அபிவிருத்தி அலுவல்களுக்காக பணம் ஈடுபடுத்தல், விகாரையில் சமூக நலனோம்பு சேவைகளை விரிவாக்கல் பௌத்த மக்களின் மனதில் சமயம்சார், சமூகம் சார் மற்றும் கலாச்சாரம் தொடர்பான மறுமலர்ச்சியொன்று ஏற்படுத்துவதற்காக தர்ம பிரச்சார நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்துதல் ஆகிய குறிக்கோள்களுக்காக நிறுவப்பட்டிருந்ததுடன், அத் தினத்திலேயே மேற்கூறிய நம்பிக்கை பொறுப்பின் புண்ணிய அலுவல்களுக்காக செலவிடுவதற்கு ரூபா பத்து இலட்சம் தொகையொன்று வழங்கும் படி திவியாஹ யஸஸ்வி பிக்குவின் வேண்டுதலை கவனம் செலுத்தி வேறொரு நம்பிக்கை பொறுப்பாகிய சீ.ஏ. வனிகசூரிய மரணச் சொத்துக் கணக்கின் நிதியிலிருந்து இந்தத் தொகையை கடனொன்றாக செலுத்தப்பட்டிருந்ததுடன், அதனை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. வேறு குறிக்கோளொன்றுக்காக நிறுவப்பட்டிருந்த நம்பிக்கை பொறுப்பொன்றின் பணம் வேறு நம்பிக்கை பொறுப்பொன்றிற்காக கடனாக வழங்குவதன் மூலம் நம்பிக்கை பொறுப்புக்களின் குறிக்கோளுக்காக அந்தப் பணம் பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.	2024 ஆண்டின் போது திவியாகக யஸஸ்வி பிக்குவிற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டதுடன், அந்தக் கடிதத்திற்கு அந்த பிக்குவினால் 2024.10.08 திகதி பதில் வழங்கியிருந்த கடிதத்தின் மூலம் குறிப்பிடப்பட்டிருந்தது அவர் கடுமையான நோய்வாய்ப்பட்டுள்ளார் எனவும், சிகிச்சைக்காக பாரிய தொகையொன்று செலவிடப்படுகின்றதெனவும், இந்தத் தொகையை பொது நம்பிக்கை பொறுப்பாளரின் புண்ணிய நம்பிக்கை பொறுப்பொன்றின் மூலம் தீர்த்துக்கொண்டு அந்த பிக்குவை இந்த நிலைமையிலிருந்து விடுவிக்கும் படி வேண்டப்பட்டிருந்தது. மேற்கூறிய விடயங்களின் அடிப்படையில் அந்த பணத்தை தொடர்ந்தும் அறவீடு செய்ய முடியாத நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாக தொடர் நடவடிக்கைக்காக சட்டங்கள் மற்றும் விசாரணைப் பிரிவிற்கு கோப்பினை ஒப்படைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	நம்பிக்கை பொறுப்பொன்றின் மூலதனம் அந்த நம்பிக்கை பொறுப்பொன்றின் குறிக்கோளுக்காக மாத்திரம் பயன்படுத்தப்பட வேண்டும்.

(vii)	திரு. டொன் சைமன் விஜேவிக்ரம அவர்களினால் 1950 ஆண்டின் போது எழுதப்பட்டிருந்த மரண சாசனத்தின் மூலம் டீ.எஸ்.டப்ளியூ. சமரகோன் புண்ணிய நம்பிக்கை பொறுப்பொன்று நிறுவப்பட்டுள்ளதுடன், திரு. டொன் சைமன் விஜேவிக்ரம் அவர்களின் அசையும் மற்றும் அசையாத சொத்துக்களில் இருந்து கிடைக்கக்கூடிய வாடகை வருமானம் மற்றும் இலாபத்தை பயன்படுத்தி நம்பிக்கை பொறுப்பின் குறிக்கோளாகிய பிலியந்தள நகரத்தில் நிர்மாணிப்பதற்காக உத்தேசித்துள்ள வைத்தியசாலையில் வாட்டு ஒன்று நிர்மாணிப்பதற்கும், அதனை அவரின் இறந்த தாயின் பெயரில் பெயரிடுவதற்கும், பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு சாட்டப்பட்டிருந்தது. தற்போது அந்த வைத்தியசாலையின் வாட்டு நிர்மாணிக்கும் அலுவல்கள் அல்லாத அடிப்படை குறிக்கோள்களுக்கு புறம்பான ஏனைய பண்டங்கள் (மருத்துவம் அல்லாத உபகரணங்கள்) நன்கொடையாக வழங்கல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	மரண சாசனத்தின் குறிக்கோள்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது, பிலியந்தலையில் நிர்மாணிப்பதற்காக உத்தேசித்துள்ள வைத்தியசாலையில் வாட்டு ஒன்று நிர்மாணித்தல், அந்த வைத்தியசாலையின் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டதற்கான தகவல்கள் எம்மிடம் காணப்படவில்லை. அதற்காக மருந்து கட்டும் அலகு மற்றும் நோயாளிகளுக்கு உணவு தயாரிக்கு சமையலறையை நவீனமயப்படுத்துவதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. 2023 நவம்பர் 29 திகதிய கடிதத்தின் மூலம் குறிப்பிட்ட தகவல்களை அனுப்பும் படி அறிவிக்கப்பட்டதுடன், பின்னர் 2024 பெப்ரவரி 12 திகதி மற்றும் 2025 ஜுலை 03 திகதி கடிதங்களின் மூலமும் வினவிய போதிலும், இதுவரை தகவல்கள் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை.	தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொண்டு நம்பிக்கை பொறுப்பின் குறிக்கோள்களை நிறைவேற்ற வேண்டும்.
(ஈ)	பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்கள கட்டளைச் சட்டத்தின் பிரிவு 47(1) இன் படி பொது நம்பிக்கை பொறுப்பாளரின் கணக்குகள் அமைச்சரினால் குறிக்கப்படுகின்ற எந்தச் சந்தர்ப்பத்திலும், அவ்வாறு விதிக்கப்படுகின்ற முறையில் குறிப்பிட்ட நபர் ஒருவரினால் குறைந்தளவு வருடத்திற்கு ஒருமுறையேனும் கணக்காய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த கணக்குகளில் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	வருடாந்தம் நம்பிக்கை பொறுப்புக்களின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்ட பின்னர் நம்பிக்கை பொறுப்புக் கணக்கு தொடர்பாக கணக்காய்வொன்று மேற்கொள்ளல் இதுவரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.	பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்கள கட்டளைச் சட்டத்தின் படி செயற்பட வேண்டும்.
(உ)	பொது நம்பிக்கை பொறுப்பாளர் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 4(4) படி கட்டளைச் சட்டத்தை நிருவகித்தல், பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு அல்லது ஏதேனும் பிரதி பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு உதவி	விதிகள் தயாரித்து முறைசார் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையொன்றினை கடைபிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சட்டத்தின் பிரகாரம் விதிகள் தயாரிக்கப்பட்டு ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையொன்று தயாரிக்கப்பட வேண்டும்.

	செய்வதற்காக தேவைப்படும் ஏதேனும், சட்ட அதிகாரிகள் மற்றும் ஏனைய பதவியணியினர் நியமனம் செய்ய முடியுமாக இருந்ததுடன், கட்டளைச் சட்டத்தின் பிரிவு 52 இன்படி இந்தக் கட்டளைச் சட்டத்தின் குறிக்கோள்களை வினைப்படுத்துவதற்காக பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கருமங்கள் அல்லது அனைத்து கருமங்களுக்காக அமைச்சரினால் சட்டங்கள் ஆக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. சட்டத்தின் 52(1)ஏ பிரிவின் படி இந்த கட்டளைச் சட்டத்தினால் விதிக்கப்பட வேண்டிய சட்டங்கள் ஆக்குவதற்காக தேவையான விடயங்கள் தொடர்பாக விதிகள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், திணைக்களம் நம்பிக்கை பொறுப்பு மற்றும் ஆதனங்களை நிருவகிக்கும் விதியொன்றென அறுதியான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையொன்று நிறுவியிருக்கவில்லை.		
(ஊ)	திணைக்களத்தின் தோட்ட நிருவாகத்தை ஆய்வு செய்தல் தொடர்பாக விஷேட குழுவின் அறிக்கையை செயற்படுத்துதல் என்ற தலைப்பில் இலக்கம் PT/10/01/01/10/07 கொண்ட 2008 ஜனவரி 01 திகதி முதல் வினைப்படுத்தப்பட்ட சுற்றறிக்கையொன்று தோட்ட நிருவாக அலுவல்களுக்காக காணப்பட்ட போதிலும், அந்த சுற்றறிக்கை விதியொன்றென வினைப்படுத்தியிருக்கவில்லை.	இந்த சுற்றறிக்கை விதியொன்றென வினைப்படுத்தியிருக்கவில்லை. எனினும், பொது நம்பிக்கை பொறுப்பாளர் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அறிவுரை ஒன்றென பயன்படுத்தப்பட்டுள்ளது.	சட்டத்தின் பிரகாரம் விதிகள் தயாரிக்கப்பட வேண்டும்.
(எ)	2024 மே மாதம் 08 திகதி பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு சாட்டப்பட்டிருந்த மரணச் சொத்து ஆதனங்கள் முகாமைத்துவம் தொடர்பாக அரச கணக்குக் குழுவினால் பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது. • சட்டமா அதிபரின் அறிவுரைகள் பெற்றுக்கொண்டு கட்டளைச் சட்டத்தை திருத்தம் மேற்கொண்டு அல்லது மாவட்ட நீதிமன்றங்களில் இருந்து தேவையான அங்கீகாரம் பெற்றுக்கொண்டு பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு சாட்டப்பட்டுள்ள மரண	பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு சாட்டப்பட்டுள்ள மரணச் சொத்து ஆதனங்களின் நிருவாகம் பிரதேச ரீதியாக மேற்கொள்வதற்காக பிரதேச செயலகங்களுக்கு சாட்டுவதற்கு பொது நம்பிக்கை பொறுப்பு கட்டளைச் சட்டத்தின் மூலம் ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. மரணச் சொத்து ஆதனங்களின் நிருவாகம் பிரதேச மட்டத்தில் மேற்கொள்வதற்காக பிரதேச செயலகங்களுக்கு சாட்டுதல் தொடர்பாக அமைச்சரினால் அல்லது அமைச்சுச்	நம்பிக்கை பொறுப்புக்களின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக மாவட்ட / பிரதேச செயலாளர்களின் உதவியை பெற்றுக்கொள்ள வேண்டும்.

சொத்துக்கள், ஆதனங்கள் நிருவகித்தல், பிரதேச மட்டத்தில் மேற்கொள்வதற்காக 25 மாவட்டங்களிலும், மாவட்ட / பிரதேச செயலாளர்களை தொடர்புகொண்டு பொருத்தமான பொறிமுறையொன்று விரைவாக தயாரிக்கும் படி பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், தற்போது வரை மரணச் சொத்துக்கள் மற்றும் ஆதனங்களின் நிருவாகம் பிரதேசங்களின் மூலம் மேற்கொள்வதற்கு பொறிமுறையொன்று தயாரித்திருக்கவில்லை.	செயலாளரினால் எமக்கு எழுத்துமூல அங்கீகாரம் வழங்கியிருக்கவில்லை. எனினும், தேவைப்பாடுகளின் மீது மற்றும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொது நம்பிக்கை திணைக்களத்திற்கு சொந்தமான ஆதனங்களின் நிருவாகத்திற்கு மற்றும் வெளிநாடுகளில் இறந்துள்ள ஊழியர்களின் நட்டஈடு செலுத்தும் போது பிரதேச செயலகங்களின் மூலம் தேவையான உதவிகளை பெற்றுக்கொள்ளல் தற்போதும் மேற்கொள்ளப்படுகின்றது.	
• பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு சொத்துக்கள் கிடைக்கும் பல்வேறு வழிகள் எவை என மற்றும் அந்த சொத்துக்கள் எப்போது கிடைக்கப் பெற்றனவும், யாரினால் சாட்டப்பட்டது எனவும், சாட்டப்பட்ட நிபந்தனைகள் எவை என விடயங்கள் அடங்கிய பதிவேடொன்று தயாரிக்கும் படி பரிந்துரைக்கப்பட்ட போதிலும், 2025 ஆகஸ்ட் 31 திகதி அளவிலும், அவ்வாறான பதிவேடொன்று தயாரிக்கப்பட வேண்டும்.	திணைக்களத்திற்கு உரித்தாக்கப்பட்ட ஆதனங்கள் தொடர்பாக விபரங்கள் அடங்கியுள்ள பிரதியொன்று இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	திணைக்களத்தின் மூலம் நிருவகிக்கப்படுகின்ற அனைத்து நம்பிக்கை பொறுப்புக்கள் மற்றும் மரணச் சொத்துக்களின் விபரங்கள் அடங்கிய பதிவேடொன்று தயாரிக்கப்பட வேண்டும்.
• நட்டத்தில் இயங்கும் தோட்டங்கள் தொடர்பாக அந்த தோட்டங்களை குத்தகைக்கு கொடுப்பதற்கு மேலதிகமாக இராணுவம், சிவில் பாதுகாப்புப் படையணி அல்லது சிறைச்சாலைத் திணைக்களம் ஆகியவற்றுடன் கலந்துரையாடி படையினர் மற்றும் சிறைக் கைதிகளைப் பயன்படுத்தி இந்தக் காணிகளை மிகவும் ஆக்கபூர்வமான பயிர் செய்வதற்கு மற்றும் ஏனைய கருமங்களுக்காக ஈடுபடுத்தும் மாற்று முறைகளை பயன்படுத்தும் படி சுட்டிக்காட்டிய போதிலும், நட்டத்தில் இயங்கும் சுதுவெலிபொத, மலுவஹேன மற்றும் மகனுகலந்த ஆகிய தோட்டங்கள் தொடர்பாக அவ்வாறான மாற்றுச் செய்முறையொன்று கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை.	பொருளாதார ரீதியாக பயிர்ச் செய்கைக்காக அல்லது ஏனைய கருமங்களுக்கு பயன்படுத்தக்கூடிய காணிப் பகுதிகளை மாத்திரம் குத்தகைக்கு கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.	நட்டத்துடன் இயங்கும் தோட்டங்களை குத்தகைக்கு கொடுத்தல், ஆக்கபூர்வமான பயிர்ச் செய்கையொன்றுக்கு ஈடுபடுத்துவதற்கு குறிப்பிட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

• காலி பத்தேகம சுதுவெலிபொதவில் அமைந்துள்ள ஹெரிகபுகொட மரணச் சொத்துக்குரிய 113 ஏக்கர் காணிப் பகுதியை குத்தகைக்கு கொடுப்பதற்காக கூறுவிலை அழைக்கப்பட்ட போதிலும், கிடைக்கப்பெற்ற குறைந்த விலைகூறல் பெறுமதி எதிர்பார்த்த அரசாங்க பெறுமதி மதிப்பீட்டை விட குறைந்த பெறுமதியொன்று காணப்பட்டமையால் குத்தகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன், குழுவினால் அந்த ஆதனங்களை குத்தகைக்கு கொடுப்பதற்காக மீண்டும் டென்டர் அழைக்கும் படி அறிவுரை வழங்கப்பட்டிருந்த போதிலும், 2025 ஆகஸ்ட் 31 திகதி அளவிலும், டென்டர் அழைப்பொன்று மேற்கொள்ளப்பட்டு குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	சாட்டுதல் மேற்கொள்வதற்கு முன்னர் வதியும் நபர்கள் மற்றும் குத்தகைக்கு கொடுக்கும் போது காணப்படுகின்ற ஏனைய பலவீனங்களை இனங்கண்டு எதிர் காலத்தில் குத்தகைக்கு கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும்.	மீண்டும் கூறுவிலைகளை அழைத்து குத்தகைக்கு கொடுக்க வேண்டும்.
• 417 விகாரைகளுக்காக விகாரை நட்டஈடு செலுத்துவதில் தாமதத்திற்கான காரணம் மற்றும் செலுத்த வேண்டிய தொகையின் எண்ணிக்கை தொடர்பாக வகைப்படுத்தப்பட்ட கால ரீதியான பதிவேடொன்று தயாரிக்கும் படி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், தாமதத்திற்கான காரணம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.	பௌத்த வழிபாட்டுத் தளங்களின் ஆதனங்கள் தொடர்பாக விகார தேவாலகம் கட்டளைச் சட்டத்தின் 318 அதிகாரத்தை திருத்துவதன் கீழ் பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரம் அந்த சட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த 1981 இன் 42 ஆம் இலக்க திருத்தத்தின் பிரகாரம் பௌத்த அலுவல்கள் ஆணையாளர் நாயகத்திற்கு சாட்டப்பட்டுள்ளது. அதன் காரணமாக விகாரை நட்டஈடுகள் வழங்குவதற்கு அல்லது விகாரை நட்டஈடு பெற்றுக்கொள்வோருக்கு தேவையான விகார நட்டம் பயன்படுத்தல் தொடர்பாக அதிகாரம் ஒன்று பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு காணப்படவில்லை. பௌத்த அலுவல்கள் ஆணையாளர் நாயகத்தின் கட்டளைகளை மாத்திரம் செயற்படுத்த முடியும்,	கொடுப்பனவு தாமதமடைந்துள்ள விகார நட்டஈடுகள் தாமதமடைவதற்கான காரணங்கள் மற்றும் செலுத்த வேண்டிய தொகை அடங்கிய பதிவேடொன்று தயாரிக்கப்பட வேண்டும்.

• 2009 மற்றும் அதற்கு முன்னர் செலுத்தியிருக்காத வெளிநாட்டு நட்டஈட்டுத் தொகையில் 1991 ஆண்டிற்கு முன்னர் இருந்து முன்கொண்டு வரப்படுகின்றதென இனங்காணப்பட்டு வருகின்ற ரூபா 59,145,636 இற்னாக மீதி 2025 ஆகஸ்ட் 31 திகதி அளவிலும் இனங்கண்டிருக்கவில்லை.	2009 மற்றும் அதற்கு முன்னர் செலுத்தப்படாத நட்டஈடு என குறிப்பிடப்பட்டுள்ள எம்மிடம் தற்போது காணப்படுகின்ற ஆவனங்களின் அடிப்படையில் கண்டறிந்த விடயங்களாக காணப்படுவதுடன், அவற்றை நிச்சயமாக உறுதிப்படுத்த முடியாதுள்ளது.	செலுத்தப்படாத வெளிநாட்டு நட்டஈடுகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
• பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தின் இணையதளத்தில் தகவல்கள் நாளதுவரை ஆக்கல் தொடர்பாக பரிந்துரைகள் இடையே தமிழ் மொழி பெயர்ப்பொன்று காணப்படாமை தொடர்பாக குழு கவனம் செலுத்தியுள்ளதுடன், அது தொடர்பாக பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தின் இணையதளத்தில் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற சேவைகள், தேவையான விண்ணப்பங்கள் மற்றும் ஆதனங்கள் தொடர்பான தகவல்கள் உட்படுத்தப்பட்டு அதன் தமிழ் மொழி பெயர்ப்பும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	கோப் குழுவின் பரிந்துரையின் படி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற சேவைகளுக்குரிய விண்ணப்பங்கள் சிங்களம் மற்றும் ஆங்கில இணையதளப் பக்கங்களில் உட்படுத்தப்பட்டுள்ளது. தமிழ் மொழி மூலம் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அந்த விண்ணப்பங்கள் மற்றும் தகவல்கள் விரைவாக தமிழ் இணைய தளப் பக்கத்தில் உட்படுத்தப்படும்.	திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற சேவைகளுக்குரிய விண்ணப்பங்களின் தமிழ் மொழி பெயர்ப்பொன்று திணைக்களத்தின் இணைய தளத்தில் உட்படுத்தப்பட வேண்டும்.